**Bodinayakanur Branch**
D.No: 22, Ponnambalam Street,
Bodinayakanur – 625 513.
Phone Number : 04546 - 283788
Mobile Number : 98421 78900
*Email Id:bodinayakanur@tmbank.in*
*CIN No.:U65110TN1921PLC001908*

Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead in life

## ஏல விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிசொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 8(6)-ன் கீழ் வங்கியிடம் அடமானத்தில் உள்ள அசையா சொத்தின் விற்பனை:

இதனால் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்/பங்குதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் **போடிநாயக்கனூர்** கிளையில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்து மேற்படி வங்கியின் மதுரை மண்டலத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டு "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ள நிலையில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் **கடன்தாரர்** திருவாளர் **நியூ ஆறுமுகம் ஸ்டோர்ஸ்** நிறுவனத்திற்காக அதன் உரிமையாளர் **திருமதி. நா. கவிதா, க/பெ. திரு.நாக சுப்பிரமணியன்,** 70/29 W, காமராஜ் பஜார், போடிநாயக்கனூர் - 625 513 மற்றும் அதன் ஜாமீன்தாரர் **திரு.நாக சுப்பிரமணியன், த/பெ.R.S.காளியப்ப நாடார்,** எண்.3 வா உ சி நகர், 3வது தெரு, போடிநாயக்கனூர் - 625 513 ஆகியோரிடமிருந்து எங்களது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, **போடிநாயக்கனூர்** கிளைக்கு வரவேண்டிய பாக்கித்தொகை **ரூ.8,05,549.02-யும் 30.11.2023** முதல் வட்டி மற்றும் செலவு தொகையை சேர்த்து வசூல் செய்வதற்காக 22.01.2024 அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஏல நிர்ணயத்தொகை ரூ.54,00,000/- மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.5,40,000/-.

### ஏலவிபரம்

மேலே சொல்லப்பட்டுள்ள நபர் 30.11.2023 வரை செலுத்த வேண்டிய பாக்கித்தொகை **ரூ.8,05,549.02 (ரூபாய் பதினேழு இலட்சத்து எண்பத்தி ஆராயிரத்து இருநூற்றி எண்பத்தி ஒன்று மற்றும் பைசா முப்பத்தி நான்கு மட்டும்)** யும் மற்றும் அதன் பின்வரும் வட்டி, செலவுத் தொகைக்காகவும் சேர்த்து கீழே குறிப்பிட்டுள்ள சொத்து 22.01.2024 அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | |
|---|---|
| **ஏலம் நடைபெறும் இடம்:** | **தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்,<br>போடிநாயக்கனூர் கிளை, கதவு எண்: 22, பொன்னம்பலம் தெரு, போடிநாயக்கனூர் - 625 513.<br>தொலைபேசி: 04546 - 283788<br>செல்: 98421 78900** |

### அசையா சொத்தின் விபரம்

1. தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, பெரியகுளம் பதிவு மாவட்டம், போடிநாயக்கனூர் துணை பதிவு மாவட்டம், போடிநாயக்கனூர் முனிசிபல் டவுன், பழைய வார்டு 6, 8-க்கு, புது வார்டு 29-க்கு, மேற்குராஜவீதியில் சர்வே வார்டு 2-க்கு, பழைய சர்வே 2033/1 நம்பரில் பழைய டோர் நம்பர் 40,41-க்கு, புது டோர் நம்பர் 32-க்கு, வரிவிதிப்பு எண்.15905 உள்ள மொத்த மனையில் ஆவண எண்.1209/2012-ன்படி கிரையப்பத்திரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தெற்குப் பக்கம் உள்ள கடை மற்றும் மனை & மனையிடத்திற்கு

**நான்குமால்:**
கிழக்கு : சங்கரபாண்டியன்பிள்ளை மனை
தெற்கு : K.ராமசாமி நாடார் கடை
மேற்கு : மேலராஜ வீதி
வடக்கு : இதன் பிரிவு S.காந்திமதிநாதன் மனை மற்றும் கடை

இம்மாலில் கிழமேல் வடபுரம் அடி 29, தென்புரம் அடி 29, தென்வடல் அடி 5'1"-க்கு, சதுரடி 147'4"-க்கு, 13.69 சதுரமீட்டர் உள்ள இடமும், மேற்படி இடத்தில் 140 சதுரடியில் கட்டியுள்ள ஆர்.சி.சி போட்ட கடையும், 140 சதுரடி ஆர்.சி.சி போட்ட மேல்மாடி கடை வகையரா சர்வடக்கமும், அதன் கட்டுக்கோப்பு கதவுநிலை முற்றும் காலியிடம் வகையராவும், தெற்கு, வடக்குச் சுவர்கள் பொதுப்பாத்தியமும், மற்ற சுவர்கள் சொந்தப் பத்தியமும் மேற்படி கடையில் இணைக்கப்பட்டுள்ள **S.C.T.581-ம்** நம்பர் மின் இணைப்பும் சேர்ந்து.

மேற்கூறிய சொத்து **திருமதி. நா. கவிதா,** க/பெ. திரு.நாக சுப்பிரமணியன் பெயரில் உள்ளது.

2. தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், போடிநாயக்கனூர் துணை பதிவு மாவட்டம், போடிநாயக்கனூர் முனிசிபல் டவுன், பழைய வார்டு 5, அதன் பின் வார்டு 8 தற்போது புதிய வார்டு 29க்கு மேற்கு ராஜவீதியில் கீழ்சரகில் சர்வே வார்டு 2க்கு பிளாக் 13ம் நம்பருக்கு சர்வே 2034, 2035 சர்வே 2036 நம்பர் சப்டிவிசன் செய்யப்பட்டுள்ள படி இப்போது சர்வே 2036/4 நம்பர்களுக்கு பழைய டோர் 39க்கு தற்போதைய புதிய டோர் 31-க்கு வரிவிதிப்பு எண் 4098 நம்பராக இருந்து தற்போது புதிய வரி விதிப்பு எண் 15904 நம்பராக உள்ள மனை தற்போது காலியிடமாக உள்ள மனையிடத்திற்கு,

**நான்குமால் :**
கிழக்கு : சர்வே 2061 நம்பர் துரைராஜ் மனை
தெற்கு : சர்வே 2027 நம்பர் அலங்கார் லாட்ஜ் கட்டிடம்
மேற்கு : சர்வே 2033/1ம் சண்முகவேல் பிள்ளை கட்டிடமும் மெயின் ரோடும்
வடக்கு : சர்வே 2045ம் நம்பர் தென்வடல் சந்தும், சர்வே 2036ம் நம்பர் பிரிவு வேல்ச்சாமி நாடார் பகவான் சிங் இவர்கள் கட்டிடமும்

இம்மாலில் சர்வே 2036/4 நம்பரில் மேல்புரம் 1வது தாக்கு கிழமேல் தென்புரமும், வடபுரமும் அடி 25 தென்வடல் மேல்புரம் அடி 2.1/2 கீழ்புரம் அடி 3க்கு சதுரடி 68.3/4 உள்ள இடமும்

சர்வே 2036/4 நம்பரில் 2வது தாக்கு கிழமேல் தென்புரமும், வடபரமும் அடி 16.1/2 தென்வடல் மேல்புரம் அடி 20 கீழ்புரம் அடி 23க்கு சதுரடி 354.3/4 உள்ள இடமும்

சர்வே 2034 நம்பரில் தென்புரம் மேல்பக்கம் கிழமேல் தென்புரம் அடி 15.1/2, வடபுரம் அடி 13.1/2 தென்வடல் மேல்புரம் அடி 10.1/2 கீழ்புரம் அடி 12.1/2க்கு சதுரடி 166.3/4-ம்

சர்வே 2035 நம்பரில் வடபுரம் 1வது தாக்கு கிழமேல் தென்புரம் 30 அடி வடபரம் அடி 26 தென்வடல் மேல்புரம் அடி 12.1/2 கீழ்புரம் அடி 14க்கு சதுரடி 371 உள்ள இடமும்

சர்வே 2035 நம்பரில் தென்புரம் கீழ்பக்கம் 2வது தாக்கு கிழமேல் தென்புரம் 16.1/2 அடி வடபுரம் அடி 16.1/2 தென்வடல் மேல்புரம் அடி 12.1/2 கீழ்புரம் அடி 13-க்கு சதுரடி 210.1/4 உள்ள இடமும் ஆக மொத்த சதுரடி 1171.1/2 உள்ள மனையிடமும் மேற்படி மனையிடத்தில் இணைக்கப்பட்டுள்ள எஸ்.சி.511-020-580 நம்பர் எலக்ட்ரிக் லைட் கனெக்சன் வகையராவும், 288 நம்பர் தண்ணீர் குழாய் கனெக்சன் வகையராவும், வடக்கும் மேற்கும் பார்த்த வழி நடை பாதை பாத்தியமும் சேர்ந்து.

மேற்கூறிய சொத்து **திரு.நாக சுப்பிரமணியன்,** த/பெ.R.S.காளியப்ப நாடார் பெயரில் உள்ளது.

| | |
|---|---|
| **ஏலம் நடைபெறும் தேதியும், நேரமும்:** | **22.01.2024 & பிற்பகல் 03.30 மணி** |

**நிபந்தனைகள்:**

1. ஏலம் கேட்பவர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் 10% தொகையை வைப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், பெயருக்கு **போடிநாயக்கனூர்** கிளையில் செலுத்தக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலமாக **22.01.2024 அன்று பிற்பகல் 03.00 மணிக்குள்** செலுத்த வேண்டும்.

2. மேற்படி சொத்தை காலை ஏலம் நடைபெறுவதற்கு முன்னர் காலை 10 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரையிலும் கிளை மேலாளர், தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் லிமிடெட், **போடிநாயக்கனூர்** கிளை (தொலைபேசி: **04546 - 283788**; செல்: **98421 78900)** அவர்களுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவித்து நேரம் ஒதுக்கி பார்வையிட்டு கொள்ளலாம்.

3. ஏலம் எடுத்த நபர்கள் ஏலம் எடுத்தவுடன் ஏல தொகையில் 25% தொகையை (EMD சேர்த்து) உடனடியாக அல்லது மறு நாள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் வைப்பீட்டு தொகை திரும்ப தரப்பட பாட்டாது மற்றும் வைப்பீட்டு தொகை முழுவதுமாக இழக்க நேரிடும் மற்றும் இந்த சொத்து பொது ஏலம் மூலம் மறுவிற்பனை செய்யப்படும்.

4. ஏலத்தில் வெற்றி பெற்றவர் ஏல தொகையில் மீதம் உள்ள 75% தொகையை விற்பனை முடிந்த 15 நாட்களுக்குள் அல்லது அங்கீகாரம் பெற்ற அதிகாரி உடன் ஏற்ப்பட்ட உடன்படிக்கை அல்லது விரிவாக்கப்பட்ட கால அளவிற்குள் செலுத்த வேண்டும். ஏலத்தில் வெற்றி பெற்றவர் குறிப்பிட்ட கால அளவிற்குள் மீதமுள்ள தொகையை செலுத்த தவறினால் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதி 2002 (9) துணை விதி (5)- ன் படி வைப்பீட்டு தொகை திருப்ப தரப்படமாட்டாது. மேலும் சொத்து மறுஏலத்தில் விற்பனை செய்யப்படுவதுடன் முழு ஏல தொகை செலுத்தாத நபர் மேற்படி சொத்தில் எந்த வித கோரிக்கையையும் பெற தகுதியற்றவர் ஆகிறார்.

5. SARFAESI சட்டத்தின் கீழ் ஏலத்தில் பங்கு கொள்ள கட்டிய வைப்பீட்டிற்கு கண்டிப்பாக வட்டி தாப்படமாட்டாது.

6. அங்கீகாரம் பெற்ற அதிகாரி அறிந்தவகையில் மற்றும் தெரிந்த தகவல்களின் படி, ஏலம் விடும் சொத்தின் பெயரில் எந்த வில்லங்கமும் இல்லை. விற்பனைக்காக உள்ள சொத்தின் மீது ஏதேனும் கட்டணங்கள், பாத்தியதைகள், வில்லங்கங்கள், சொத்து வரி அல்லது அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் இருந்தால் அதற்கு அங்கீகாரம் பெற்ற அதிகாரி பொறுப்பேர்க்கமாட்டார்.

7. ஏலம் எடுக்கும் நபர் சட்டத்தின் படி பொருந்தக்கூடிய பதிவுக்கட்டணம், முத்திரை கட்டணம் போன்ற செலவுகளை அவரே ஏற்று கொள்ள வேண்டியது.

8. அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு எந்த காரணமும் கூறாமல் ஏலத்தை ஏற்று கொள்ளவோ/ நிராகரிக்கவோ/ மாற்றி வைக்கவோ அல்லது ரத்து செய்ய முழு அதிகாரம் உண்டு. விருப்பமுள்ள விலைப்புள்ளிதாரரின் ஏலப்படிவம் ஒழுங்காக இல்லாவிடில் அதை நிராகரிக்க அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு உரிமை உண்டு.

9. ஏலம் விற்பனைக்கான சொத்துக்கள் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. மேற்படி சொத்துக்கள் "உள்ளது. உள்ளபடி நிலையில்" விடப்படும்.

10. ஏலம் கேட்பவர்கள் தங்களது ஒரிஜினல் அடையாள அட்டையான அதவாது ஆதார் அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், ரேஷன் கார்டு, வாக்காளர் அட்டை மற்றும் பான் கார்டு (Pan card) ஏதாவது ஒன்றை ஏலத்தில் கலந்து கொள்ளும்போது கொண்டு வர வேண்டும்.

11. விற்பனை சான்றிதழ் ஏலம் எடுத்தவர் பெயரில் மட்டுமே பதிவு செய்து கொடுக்கப்படும் வேறு நபர்கள் பெயரில் கண்டிப்பாக கொடுக்கப்பட மாட்டாது. விற்பனை பத்திரத்தை பதிவு செய்ய பத்திர கட்டணம், முத்திரை கட்டணம் மற்றும் அதற்கு தொடர்புடைய பிற அரசாங்க கட்டணங்கள், வரி முதலியவற்றை ஏலம் எடுத்த நபரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

12. ஏலத்தில் வெற்றி பெற்றவர் / கொள்முதல்தாரர் அவர்களுக்கு வருமானவரி சட்டம் 1961, பிரிவு 194 1A-ன் படி விற்பனை விலையில் 1% TDS கழித்து செலுத்த வேண்டும் மற்றும் அதனை செலுத்தியதற்கான படிவம் 26 QB உடன் ரசீது மற்றும் TDS அசல் சான்றிதழை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். (50.00 லட்சத்திற்கு மேல் உள்ள சொத்திற்கு)

13. மேலும் இந்த விற்பனை அறிவிப்பு www.tmb.in என்ற இணையதளத்தில் பதிவேற்றும் / பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**இடம் : மதுரை**
**தேதி : 29.12.2023**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட் ,**
**மண்டல அலுவலகம், மதுரை.**
**[போடிநாயக்கனூர் கிளைக்காக]**

<u>ஏல விற்பனை அறிவிப்பு பெறுபவர்களின் முகவரி:</u>

**நியூ ஆறுமுகம் ஸ்டோர்ஸ்** நிறுவனத்திற்காக அதன் உரிமையாளர்
**திருமதி. நா. கவிதா, க/பெ. திரு.நாக சுப்பிரமணியன்,**
70/29 W, காமராஜ் பஜார், போடிநாயக்கனூர் - 625 513

ஜாமீன்தாரர்
**திரு.நாக சுப்பிரமணியன், த/பெ.R.S.காளியப்ப நாடார்,**
எண்.3 வா உ சி நகர், 3வது தெரு, போடிநாயக்கனூர் - 625 513